# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-காஞ்சிபுரம் மாவட்டம்

(21.09.2016 முதல் 25.09.2016 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (16.09.2016 முதல் 19.09.2016)**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. 28.9 மி.மீ அளவு மழை பெய்த்து. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 31.0-35.0℃ மற்றும் 23.0–27.0℃ என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 64 முதல் 94 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 4–7 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 21.09.2016 | 22.09.2016 | 23.09.2016 | 24.09.2016 | 25.09.2016 |
|---|---|---|---|---|---|
| **மேகமூட்டம்** | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| **மழை பொழிவு (மி.மீ)** | 5 | 7 | 5 | 4 | 6 |
| **காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு** | 7 | 7 | 7 | 7 | 7 |
| **காற்று வரும் திசை** | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு |
| **வெப்பநிலை°C** | | | | | |
| **அதிகபட்ச வெப்பநிலை°C** | 35 | 35 | 35 | 34 | 34 |
| **குறைந்த பட்ச வெப்பநிலை°C** | 26 | 26 | 26 | 26 | 26 |
| **ஈரப்பதம்** | 67-80 | 67-80 | 67-80 | 69-82 | 69-82 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. மழைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. கால்நடைகளை ஏரி மற்றும் குளங்களில் உள்ள புற்களை மேயாமல் பார்த்துக்கொள்வதன் மூலம் தட்டைப் புழுக்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.
4. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
5. உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் 3 பாக்கெட் (600 கிராம்/ஹெ) மற்றும் பாஸ்போபாக்டீரியா 3 பாக்கெட் (600 கிராம்/ஹெ) அல்லது அசோபாஸ் 6 பாக்கெட் (1200 கிராம்/ஹெ) ஆகியவற்றை போதுமான அளவு தண்ணீர் சேர்த்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.
2. நெல் நாற்றாங்காலில் களைகளைக் கட்டுப்படுத்த விதைத்த மூன்றாம் நாள் ஹெக்டருக்கு 300 கிராம் பிரிடில்லாகளோர்+ சேஃப்பனர் என்ற களைக்கொல்லியை தெளிக்கவும். களைக்கொல்லியை தெளிப்பதற்கு முன்பாக கண்ணாடி அளவு நீர் நிறுத்தி வடிக்கட்டாமல் பார்த்துக்கொள்ளவும்.